**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**ஹஜ்ஜுப் பெருநாள் பிரசங்கம்**
**12 செப்டம்பர் 2016 / 10 துல்ஹஜ் 1437 ஹிஜிரி**

# நமக்கு வழிகாட்டியாக உள்ள இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வி

اللهُ أَكْبَرُ **9x**

اللهُ أَكْبَرُ، مَا تَقَرَّبَ الْعَبْدُ بِقُرْبَانْ.

اللهُ أَكْبَرُ، مَا رَغِبَ الْعَابِدُوْنَ فِي الْغُفْرَانْ.

اللهُ أَكْبَرُ، مَا حَمِدَهُ الْإِنْسُ وَالْجَانْ.

اللهُ أَكْبَرُ، مَا جَرَتِ الْكَوَاكِبُ بِحُسْبَانْ.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ.

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَاللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ وَللهِ الْحَمْدُ.

اَلْحَمْدُ للهِ الَّذِى جَعَلَ هَذَا الشَّهْرَ وَجَعَلَ عِبَادَةَ الْحَجِّ وَعِيْدَ الأَضْحَى مِنْ شَعَائِرِ اللهِ وَإِحْيَاءَهَا مِنْ تَقْوَى الْقُلُوب. أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ. وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ الْمَبْعُوْثُ رَحْمَةً لِّلعَالَمِيْنَ. اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ.

أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، إِتَّقُوا اللهَ، وَأُوْصِيكُمْ وَإِيَّايَ بِتَقْوَى اللهِ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

"பரக்கத்கள்" (அபிவிருத்திகள், வளங்கள்) மிக்க இந்நேரத்தில், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "ஈமான்" (ஓரிறை நம்பிக்கை) மற்றும் "தக்வா" (இறை பக்தி) அதிகரிப்பதற்கு அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! "தக்பீர்" கூறி, அல்லாஹ்வைப் புகழ்ந்து, அவனை மகிமைப்படுத்தும் நிலையில் நம்மை நாம் தாழ்த்திக் கொள்வோமாக! அல்லாஹ் நமக்கு அருளியுள்ள அனைத்து "நிஃமத்" (அருட்கொடைகளை) நினைத்துப் பார்த்து, அவனது மகிமையை நமது உள்ளங்களில் ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ் தான், நமக்கு நல்ல உடல் நலத்தையும், ஈமானையும் அருளியுள்ளான். இத்தற்காலிக உலகில், நாம் அமைதியையும் மகிழ்ச்சியையும் அனுபவிப்பதற்காக நமக்கு குடும்பத்தார்களையும் செல்வத்தையும் அந்த அல்லாஹ் தான் வழங்கியுள்ளான். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மையும், ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நமது சகோதர, சகோதரிகளையும் அவனது திருப்தியைப் பெற்ற அடியார்களில் நின்றும் ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்**

**அல்லாஹ் அக்பர் வலில்லாஹில் ஹம்து.**

# துல்ஹஜ் மாதத்தின் சிறப்பை அறிதல்

அன்பிற்குரிய முஸ்லிமீன், முஸ்லிமாத்! (முஸ்லிமான ஆண், பெண் மக்களே!) ஒவ்வொரு வருடமும் வரக்கூடிய ”ஈதுல் அள்ஹா” ஹஜ்ஜுப் பெருநாள் தினம், இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) மற்றும் அவர்களின் மகனார் இறைத்தூதர் இஸ்மாயீல் (அலை) அவர்களின் தியாகச் செயல்களை நினைவூட்டுகின்றன. இம்மாபெரும் தியாக வரலாற்றின் பாடம் ஒவ்வொரு ”ஈதுல் அள்ஹா” தினத்தில் மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கப்படுகிறது.

எனினும், இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) அவர்களின் முன்மாதிரியான நன்னடத்தை, அவர்கள் தனது மகன் இறைத்தூதர் இஸ்மாயீல் (அலை) அவர்களை, அல்லாஹ்வின் கட்டளையின் பேரில் அறுத்துப் பலியிட முயற்சித்ததில் மட்டும் பிரதிபலிக்கவில்லை; அத்துடன், அவர்கள் தனது குடும்பத்தார்கள் மற்றும் பிள்ளைகள் விஷயத்தில் எடுத்துக் கொண்ட அக்கறையிலும் பிரதிபலித்தது. அவர்கள் தனது பிள்ளைகளுக்காகவும் சந்ததிகளுக்காகவும் செய்த பிரார்த்தனைகளில் ஒரு தகப்பனின் ஆழமான அன்பு பிரதிபலிப்பதைக் காணலாம். அவர்கள் செய்த பிரார்த்தனைகளில் சில, திருக்குர்ஆனின் ”அல்-பகரா” எனும் அத்தியாயத்தின் 128-வது வசனத்தில் பின்வருமாறு காணப்படுகின்றன:

رَبَّنَا وَٱجۡعَلۡنَا مُسۡلِمَيۡنِ لَكَ وَمِن ذُرِّيَّتِنَآ أُمَّةٗ مُّسۡلِمَةٗ لَّكَ وَأَرِنَا
مَنَاسِكَنَا وَتُبۡ عَلَيۡنَآۖ إِنَّكَ أَنتَ ٱلتَّوَّابُ ٱلرَّحِيمُ ﴿١٢٨﴾

பொருள்: "எங்கள் இறைவனே! எங்கள் இருவரையும் உன்னை முற்றிலும் வழிபடும் முஸ்லிம்களாக்குவாயாக; எங்கள் சந்ததியினரிடமிருந்தும் உன்னை முற்றிலும் வழிபடும் ஒரு கூட்டத்தினரை (முஸ்லிம் சமுதாயத்தை) ஆக்கி வைப்பாயாக; நாங்கள் உன்னை வழிபடும் வழிகளையும் அறிவித்தருள்வாயாக; எங்களை(க் கருணையுடன் நோக்கி எங்கள் பிழைகளை) மன்னிப்பாயாக; நிச்சயமாக நீயே மிக்க மன்னிப்போனும், அளவிலா அன்புடையோனாகவும் இருக்கின்றாய்."

**அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்**
**அல்லாஹ் அக்பர் வலில்லாஹில் ஹம்து.**

## மார்க்கத்தைத் தவறாகப் புரிந்து கொள்வது

ஜமாஅத்தார்களே! இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) மனிதகுலத்துக்கு மிக ஆர்வத்துடன் வழிகாட்டினார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் தமது பிள்ளைகளையும் குடும்பத்தாரையும் புறக்கணிக்கவில்லை என்பதையும் உறுதி செய்தார்கள். காரணம், தனது பிள்ளைகளும் இம்மை, மறுமை வாழ்க்கைகளில் வெற்றிபெற்றவர்களாகவும் பாதுகாப்பானவர்களாகவும் இருக்க வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். எனது சகோதர, சகோதரிகளே! அவ்வாறு தான் நாமும் இருக்க வேண்டும். மனிதர்கள் எனும் ரீதியில், நாமும் நமது பிள்ளைகள் மற்றும் வழித்தோன்றல்கள் அனைவரும் வெற்றிபெற்றவர்களாக இருக்க வேண்டும்; சொர்க்கத்தில் இடம் பிடித்தவர்களாக இருக்க வேண்டும் என விரும்புவது நமது உள்ளார்ந்த பண்பாக இருக்க வேண்டும். அது தான், உண்மையான

அன்பாகும். பெற்றோர்களின் அம்மாதிரியான அன்பு தான், அவர்களின் பிள்ளைகளுக்கு அல்லாஹ்வின் சொர்க்கத்தின் பால் வழிகாட்டுவதாக இருக்கும். இக்கருத்து தான், திருக்குர்ஆனின் ”அத்தூர்” எனும் அத்தியாயத்தின் பின்வரும் 21 -வது வசனத்தில் கூறப்படுகின்றது:

وَالَّذِينَ آمَنُوا وَاتَّبَعَتْهُمْ ذُرِّيَّتُهُم بِإِيمَانٍ أَلْحَقْنَا بِهِمْ ذُرِّيَّتَهُمْ وَمَا أَلَتْنَاهُم
مِّنْ عَمَلِهِم مِّن شَيْءٍ ۚ كُلُّ امْرِئٍ بِمَا كَسَبَ رَهِينٌ ﴿٢١﴾

பொருள்: எவர்கள் ஈமான் கொண்டு, அவர்களுடைய சந்ததியாரும் ஈமானில் அவர்களைப் பின் தொடர்கிறார்களோ, அவர்களுடைய அந்த சந்ததியினரை அவர்களுடன் (சுவனத்தில் ஒன்று) சேர்த்து விடுவோம். (இதனால்) அவர்களுடைய செயல்களில் எந்த ஒன்றையும், நாம் அவர்களுக்குக் குறைத்து விட மாட்டோம் - ஒவ்வொரு மனிதனும் தான் சம்பாதித்த செயல்களுக்குப் பிணையாக இருக்கின்றான்.

”முஸ்லிமீன்” ”முஸ்லிமாத்”! நமது இந்த விருப்பத்தை நாம் தனிப்பட்ட வகையில் விரும்புவதாலோ அல்லது கணவு கண்டு கொண்டு இருப்பதாலோ அடைந்து விட முடியாது. நாம் துஆச் செய்வதுடன், அல்லாஹ்வின் சொர்க்கத்தில் நமக்கும் நமது குடும்பத்தார்களுக்கும் இடம் கிடைப்பதற்காக கடின முயற்சிகளை ஆர்வத்துடன் செய்வது அவசியமாகும்.

நமது நோக்கத்தை அடைவதற்காக, நாம் செய்ய வேண்டிய அடிப்படையான முயற்சிகளில் ஒன்று, நமது குடும்பத்தார்களின் சன்மார்க்கக் கல்வியறிவை முன்னேற்றுவதாகும். கல்வியறிவின்

மூலமாகவே "அல்லாஹ் ஒருவனே இறைவன்" எனும் நம்பிக்கை நமது பிள்ளைகளிடம் ஏற்படும். கல்வியறிவைப் பெற்றிருந்தால் தான், வணக்க வழிபாட்டுச் செயல்களை அல்லாஹ் கட்டளையிட்டுள்ளதன் பிரகாரம் நிறைவேற்றும் ஆற்றலை அவர்கள் பெறுவார்கள். மார்க்கத்தை உண்மையாக, சரியாக அவர்கள் அறிந்தால் தான், அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்ற, குழப்பங்கள் மற்றும் அறியாமைகளை விட்டும் பாதுகாப்பான முஸ்லிம்களாக தொடர்ந்து அவர்கள் வாழ முடியும்.

ஒரு காலத்தில், இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட கருத்துக்களால் நமது பிள்ளைகள் வழிதவறி விடுவார்களோ எனக் கவலைப்பட்டோம். ஆனால், இக்காலத்தில், நமது மார்க்கத்திற்குள்ளேயே ஏற்படுத்தப்படும் குழப்பங்கள் மற்றும் பிரச்னைகளுடன் கூடிய விளக்கங்களால் நமது பிள்ளைகள் வழிதவறி விடுவார்களோ என அஞ்ச வேண்டியதுள்ளது. உதாரணமாக, முஸ்லிம்களை "தக்ஃபீர்" ஆக்குவதற்கு ஆர்வமூட்டும் போதனைகளை எடுத்துக் கொள்ளலாம். இப்போதனைகள், முஸ்லிம்களை "காஃபிர்கள்" எனத் தீர்மானிக்கின்றது. சிலர், தம்மைப் பின்பற்றுபவர்களிடம் மற்ற முஸ்லிம்களை வழி தவறியவர்கள் எனக் கூறுமாறு தூண்டுகிறார்கள். இங்கு, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் பின்வருமாறு நமக்கு நினைவூட்டியுள்ளதை நினைவில் கொள்ள வேண்டும்:

أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قال : مَن قَالَ لِأَخِيهِ يَا كَافِرِ، فَقَدْ بَاءَ بِهَا أَحَدُهُمَا.

பொருள்: ”எவரொருவர் தனது சகோதரனைப் பார்த்து ”கா∴பிர்” எனக் கூறுகிறாரோ, இருவரில் ஒருவர் ”கா∴பிர்” ஆக ஆகி விடுவார்” என இறைத்தூதர்(ஸல்) நவின்றுள்ளார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் மாலிக் ரஹ்)

மற்றவர்களை ”கா∴பிர்” களாக ஆக்குவது, அல்லது வழிதவறியவர்கள் எனக் கூறுவது, அல்லது அல்லாஹ்வின் திருப்தியை விட்டும் வெளியேறிவர்கள் எனக் கூறுவது போன்ற பழக்க வழக்கங்களை சமுதாயத்தில் நிலைத்திருக்கச் செய்வது மிகவும் ஆபத்தானதாகும். இன்று, இஸ்லாமியக் கல்வியறிவின் திறன் பெற்றிராத சிலர், சகோதர முஸ்லிம்களை ”∴பித்அத்” (புதுமைகளைச்) செய்பவர்கள், மண்ணறைகளை வணங்குபவர்கள், அஹ்லுஸ் ஸுன்னாஹ் வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என மிக எளிதில் தீர்ப்பளித்து விடுகிறார்கள். அறிஞர்களால் விவாதிக்கப்பட்ட விவாதங்களை அடிப்படையாகக் கொண்டு மட்டும் அவ்வாறு கூறிவிடுகிறார்கள்.

இங்கு, கவலை தரும் விஷயம் யாதெனில், இவ்விதமான சிந்தனைகள் மார்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடம் மட்டும் ஏற்படுகின்றது என்பதல்ல, ”சூ∴பி” ”ஸல∴பி” என்பது போன்ற மார்க்கத்தின் பல பிரிவாரிடமும் இவ்விதமான மனப்போக்குடைய தனிநபர்கள் உருவாகி வருகிறார்கள்.

ஷைத்தான், நமக்கு மத்தியில் வெறுப்பு எனும் தீயை மூட்டுவதற்கு நாம் அனுமதித்து விடக் கூடாது. இமாம் "இப்னு ஆபிதீன்" அவர்கள் தனது "ரத்துல் முக்தார்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ள பின்வரும் கருத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்:

"ஒரு "முஃமினை" (ஓரிறை நம்பிக்கையாளரை) காஃபிர் எனத் தீர்மானிக்கும் 70 கருத்துக்கள் இருந்தாலும், மறுபுறம், ஒரு முஃமினை "காஃபிர்" எனக் கூறாத ஒரேயொரு கருத்து இருக்குமானால் -அது பலஹீனமானதாக இருந்த போதிலும்- முஃமினைக் காஃபிர் எனத் தீர்மானிக்காத கருத்தையே தீர்ப்பளிக்கும் நீதிபதி (காதி) தேர்ந்தெடுக்க வேண்டும்"

"முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதவர்களுடன் இணைந்து அமைதியாக வாழ முடியாது" எனக் கூறப்பட்ட சன்மார்க்கக் கருத்துக்களை இங்கு நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்விதமானக் கருத்துக்களைக் கூறுபவர்கள், முஸ்லிம் அல்லாதவர்களின் விஷயத்தில் மிகவும் பழைய, விறைப்பான கருத்துக்களைத் தேர்ந்தெடுப்பவர்களாக உள்ளார்கள். உண்மையில், நாம் நன்கு ஆய்வு செய்து பார்த்தால், இவ்விதமான கருத்துக்களும் தீர்ப்புகளும், மோதல்கள் மற்றும் பதற்றமான சூழ்நிலைகளில் அல்லது போர் சம்பந்தமான சூழலில் முஸ்லிம்கள் வாழ்ந்த போது விடுக்கப்பட்டவையாக இருந்துள்ளதைக் காணலாம்.

இவ்விதமான கருத்துக்கள் சிங்கப்பூருக்குப் பொருந்துபவையல்ல. காரணம், இங்கு நாம் அமைதியாகவும், மற்ற நம்பிக்கைகளைப் பின்பற்றுபவர்க

ளோடு நல்ல உறவோடும் வாழ்ந்து வருகிறோம். மேலும், இது போன்ற கருத்துக்கள் மற்ற மதங்களைப் பின்பற்றும் மக்களுடன் நாம் பழகும் போது நமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதோடு, இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களைப் பற்றி தவறான எண்ணத்தையும் உருவாக்கும்.

இவ்விதமானக் கருத்துக்களைக் கொண்டுள்ளவர்கள், அடிக்கடி திருக்குர்ஆனின் சில வசனங்களை மேற்கோள் காட்டுகிறார்கள். அவ்வசனங்களில் ஒன்று, "அல்-மாயிதா" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 51-வது வசனம் ஆகும். அதன் பொருள்:

முஃமின்களே! யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் உங்களுடைய பாதுகாவலர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அவர்கள் தம்மில் சிலர் சிலருக்குப் பாதுகாவலர்களாக இருக்கின்றனர்; உங்களில் எவரேனும் அவர்களைப் பாதுகாவலர்களாக ஆக்கினால் நிச்சயமாக அவரும் அவர்களைச் சேர்ந்தவர் தான்; நிச்சயமாக அல்லாஹ் அநியாயக்கார மக்களுக்கு நேர்வழி காட்டமாட்டான்.

வெளிப்படையாகப் பார்க்கும் போது, மேற்கண்ட வசனமாகிறது முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் எனத் தடுப்பதைப் போல் உள்ளது. எனினும், இவ்வசனம் ஏன் அருளப்பட்டது என்பதை அறிவது அவசியமாக உள்ளது. அப்போது தான் இவ்வசனம் அருளப்பட்டதற்கான நோக்கத்தை நாம் அறிய முடியும்.

இமாம் அஸ்ஸுயூத்தி (ரஹ்) தனது திருக்குர்ஆன் விரிவுரையில் குறிப்பிடுகையில்: "யூதர்கள் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுடன் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். அந்த ஒப்பந்தத்துக்கு மாற்றமாக யூதர்கள் நடந்து கொண்ட போது இவ்வசனம் இறங்கியது" எனக் கூறுகிறார்கள். இதன் மூலம், இவ்வசனம் அந்தச் சூழ்நிலையில் மட்டும் தான் பொருந்தக் கூடியது என்பது புலனாகிறது. பொதுவாக, நாம் முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என இவ்வசனம் கூறவில்லை. மற்ற நம்பிக்கையாளர்களின் மத சம்பந்தமான விழாக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கக் கூடாது; ஒரு சமுதாயம் எனும் ரீதியில்- குறிப்பாக, அவர்கள் நமது நண்பர்களாகவோ, அண்டை வீட்டார்களாகவோ அல்லது குடும்ப உறுப்பினர்களாகவோ இருக்கும் நிலையில்- கூட்டாக வாழும் போது ஒத்துழைப்பு செய்யக் கூடாது என்றெல்லாம் மேற்கண்ட வசனம் தடுக்கவில்லை. உண்மையில், சில முக்கியமான விஷயங்களில் முஸ்லிம் அல்லாதவர்களின் உதவியையும் சேவையையும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களே கூட பெற்றுள்ளார்கள்.

உதாரணமாக, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு "ஹிஜ்ரத்" எனும் தியாகப் பயணம் செய்த போது, "அப்துல்லாஹ் பின் உரைக்" என்ற முஸ்லிமல்லாத நபரிடம் வழிகாட்டுமாறு கேட்டுக் கொண்டார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் "தாயிஃப்" நகரிலிருந்து மக்காவுக்குத் திரும்பி வந்த போது அவர்களுக்கு மக்காவில் அடைக்கலம் கொடுத்தவர் "முத்யிம் பின் அதீ" எனும் முஸ்லிமல்லாத நபர் ஆவார்.

**அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்**

**அல்லாஹ் அக்பர் வலில்லாஹில் ஹம்து.**

## நம்பகமான மூலங்களிலிருந்து கல்வியைத் தேடுவதன் அவசியம்

ஜமாஅத்தார்களே! நான் சற்று முன்பு உங்களுடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள், அதாவது, "முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களுடன் இணைந்து அமைதியாக வாழ முடியாது" என்பது போன்ற கருத்துக்கள் வெளிப்படையில் சரியானவை போல் தென்பட்டாலும் அவை, முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்களுக்கிடையே வெறுப்பையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்துபவையாக உள்ளன. சிங்கப்பூர் போன்ற பலதரப்பட்ட மக்கள் வாழும் சூழ்நிலையில்- குறிப்பாக, சிங்கப்பூர் இஸ்லாமிய நாடாக இல்லாத நிலையில்- அவை மகிழ்ச்சியின்மையை ஏற்படுத்தும். இது போன்ற கருத்துக்கள் நமது குடும்பத்தார்கள் மற்றும் பிள்ளைகளின் மனங்களில் ஆதிக்கம் செலுத்துவதை நாம் அனுமதித்தால் நமது சன்மார்க்கம் கூறும், நன்மைகள் புரிதல் மற்றும் கிருபையின் பாதையிலிருந்து அவர்கள் வழிதவறி விடுவார்கள் என நான் அஞ்சுகிறேன். மறுபுறம், பல அப்பாவி உயிர்களைப் பறிக்கும் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுமாறு அழைப்பு விடுப்போருக்குச் செவிசாய்ப்பவர்களாக, அவர்களை நம்புபவர்களாக நமது குடும்பத்தார்கள் ஆகி விட்டால் நிலைமை இன்னும் மோசமாகி விடும்.

எனவே, சன்மார்க்க ரீதியில் நமக்கு வழிகாட்டும் நபர்களைத் தேர்ந்தெடுக்கும் போது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நமக்கும் நமது குடும்பத்தார்களுக்கும் போதிக்கும் சன்மார்க்க ஆசிரியர்கள் சன்மார்க்கக் கல்வியில் நிபுணத்துவம் பெற்றிருப்பதையும், சிங்கப்பூர்

சூழலில் இஸ்லாத்தைப் போதிக்கும் ஆற்றல் பெற்றிருப்பதையும் நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். நான் சற்று முன்பு உங்களிடம் தெரிவித்த கருத்துக்களைப் போன்ற பிரச்னைக்குரிய கருத்துக்களைப் போதிக்கும் ஆசிரியர்களிடம் கல்வி கற்பதை நாம் விரும்புவோமா? நிச்சயமாக நான் அக்கருத்துக்களை நம்பமாட்டேன்.

இந்த அடிப்படையில் தான், இந்நாட்டின் அறிஞர்கள், மூத்த அஸாதிதாக்கள் (ஆசிரியர்கள்), சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம் மற்றும் பெர்காஸ் நிறுவனத்துடன் இணைந்து பத்து வருடங்களுக்கு முன்பு Asatizah Recognition Scheme (ARS) என்பதை நிறுவினார்கள். சன்மார்க்க வழிகாட்டுதலை விரும்பும் நமது சமுதாய உறுப்பினர்கள், பயிற்சிபெற்ற, தேவையான திறமைகளை உடைய ஆசியர்களை அடையாளம் காணும் ஆற்றலைப் பெற வேண்டும் என்ற நோக்கில் இந்நிறுவனம் (ARS) ஆரம்பிக்கப்பட்டது. சிங்கப்பூரில் காணப்படும் அங்கீகாரம் பெற்ற அமைப்புகள், ARS, இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு ஆகியவை, பிரச்னைக்குரிய அல்லது வழிதவறிய மார்க்கக் கருத்துக்களைப் பரப்ப விரும்பும் பொறுப்பற்ற தனிநபர்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் என நம்புகிறோம்.

அத்துடன், நமது பிள்ளைகள் கலந்து கொள்ளும் மார்க்கம் சம்பந்தமான வகுப்புகளில் போதிக்கப்படும் கருத்துக்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ”ஆன்லைன்” மூலம் நமது பிள்ளைகள் பெறும் கருத்துக்களையும் நாம் கவனிக்க வேண்டும். பெற்றோர்கள் எனும் ரீதியில்

நமது பிள்ளைகள் எதைக் கற்கின்றார்கள், படிக்கின்றார்கள், எவற்றை நோட்டமிடுகிறார்கள் என்பதை அறிவதில் நாம் ஆர்வமாக இருக்க வேண்டும். அவர்கள் என்ன கற்றார்கள் என்பதை அவர்களிடம் கேட்க வேண்டும். பிரச்னைக்குரிய கருத்துக்கள் இணையதளம் மூலம் எளிதாகப் பெற்று, அவற்றை எளிதில் பரப்பவும் முடிகிறது. எனவே, நாம் மிகவும் கவனமாக இருப்பது அவசியமாகும். உதாரணமாக, ஆயுதங்களைத் தூக்க வேண்டும்; குறிப்பிட்ட வகுப்பார், சமுதாயம் அல்லது இஸ்லாமிய நாட்டுக்கு எதிராகப் போராட வேண்டும் என்றெல்லாம் நமது பிள்ளைகள் விவாதிப்பதை அறிந்தால், உடனே அக்கம்பக்கத்திலுள்ள பள்ளிவாசல்களின் உதவியை நாடலாம். அல்லது முஃப்தி அலுவலகத்தையோ, Religious Rehabilitation Group (RRG) எனும் நிறுவனத்தையோ நேரடியாக நாம் அணுகலாம்.

"முஸ்லிமீன்" "முஸ்லிமாத்"! அல்லாஹ் அஜ்ஜ வஜல்லவுக்கு நம்மை தாழ்த்திக் கொள்வோமாக! அவனிடம் பிரார்த்தனை புரிவோமாக! யா அல்லாஹ்! கஃபத்துல்லாஹ்வைப் பாதுகாத்தவனே! இம்மையிலும் மறுமையிலும் எதிர்மறையான சக்திகளிலிருந்து எங்களையும் எங்கள் குடும்பத்தார்களையும் எங்கள் சமுதாயத்தையும் பாதுகாப்பாயாக! நீ விரும்பும் உண்மையான கல்வியறிவின் மூலம் எங்களின் "ஈமான்" மற்றும் "தக்வா" வைப் பாதுகாப்பாயாக! உனது "ஹிதாயத்" எனும் அணைக்க முடியாத விளக்கால் எங்களுக்கு வழிகாட்டுவாயாக! மார்க்கத்தைப் பற்றிப் பிடிப்பதற்கும், நீ கட்டளையிட்டுள்ளது போல் நன்மைகளைப் பரப்புவதற்கும் எங்களுக்கு வழிகாட்டுவாயாக!

யா ஹலீம்! யா லதீஃப்! எங்களின் உறவுகளைப் பலப்படுத்துவாயாக! எங்களின் உள்ளங்களில் காணப்படும் கடும் வெறுப்பு, பகைமை, பழிவாங்குதல் போன்ற தீயை அணைத்து விடுவாயாக! உனது கருணை மழையைப் பொழிந்து எங்களின் உள்ளங்களை மிருதுவாக்குவாயாக! உனது தூதரின் "சுன்னாஹ்" எனும் அழகிய வழிமுறையின் மூலம் எங்களது நடத்தைகளை அலங்கரிப்பாயாக! உனது சொர்க்கத்தில் வசிப்போரின் நின்றும் எங்களையும் ஆக்குவாயாக! யா அர்ஹமர் ராஹிமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.